**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண் : 108/2018**
**நாள் : 04/08/2023, வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - வசந்தகுமார் | த/பெயர் - சண்முகம் |
| வயது - 29 | தொழில் - |
| விலாசம் - காமராஜர் தெரு, பெரிய காலனி, பெருங்காவூர் கிராமம், விச்சூர் அஞ்சல், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணை (PW1)**

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கேட்டால் தாவா சொத்தில் எனது சுவாதீனம் குறித்து பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வாதுரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தாய் மற்றும் சகோதரிக்கும் சேர்த்து தான் இந்த நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். நான் தற்போது ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். தாவா சொத்து பெருங்காவூர் கிராமத்தில் உள்ளது. அதன் சர்வே எண்.255/1A5 ஆகும். அதன் பட்டா எண்.215 ஆகும். தாவா சொத்தின் பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்று கேட்டால் முனுசாமி பெயரில் உள்ளது. ஆனால் அந்த இடத்தை நாங்கள் தான் ஆண்டு அனுபவித்து வருகிறோம். முனுசாமி பிரதிவாதிகளின் தந்தை என்றால் சரிதான். முனுசாமி தங்களுக்கு என்ன உறவுமுறை என்று கேட்டால் உறவுமுறை தெரியாது. தாவா சொத்தின் பரப்பளவு 5886 சதுர அடி ஆகும். தாவா சொத்தின் நான்கு எல்லை விவரம் எனக்கு

தெரியாது. தாவா சொத்தின் நான்கு பக்கமும் எவ்வளவு அளவு என்ற விவரம் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. பட்டாதாரர் முனுசாமியின் தந்தை பெயர் குள்ளன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1ல் முனுசாமி த/பெ குள்ளன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் சொத்தை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். வா.த.சா.ஆ.12 வில்லங்க சான்றிதழில் முனுசாமி அந்த சொத்தை யாரிடமிருந்து வாங்கினார் என்ற விவரத்தை அதில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அதனால் முனுசாமிக்கு அனுபவ ரீதியாக அரசாங்கத்தின் மூலம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்து குறித்து தங்களிடம் ஏதேனும் வருவாய்த்துறையின் சான்று உள்ளதா என்று கேட்டால் வீட்டுவரி செலுத்தியுள்ளோம். தாவா இடத்திற்கு அரசாங்கம் கட்டித்தரும் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீடு முனுசாமியின் பட்டா பெயரில் தான் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது 2017ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அந்த வீடு கட்ட எனது தாயார் பெயருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டில்லியம்மாள் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்று கேட்டால் தெரியவில்லை. நீங்கள் அவ்வாறான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசாங்க வீடு கட்டும்போது தான் பிரதிவாதிகள் தொந்தரவு செய்ய முன்வந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் 300 சதுடி அடிக்கு வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் எல்லைகள் தங்களுக்கு தெரியுமா என்று தெரியாது. அளவுகளும் தெரியாது. அந்த வீடு ஒட்டு வரையில் முடிக்கப்பட்டுள்ளது. முழுமையாக முடிக்கவில்லை. ஆனால் அதில் தான் அனுபவித்து வருகிறோம். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்து விவரத்தில் கூரை

வீடு இருப்பதாக தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். அப்போது தான் வீட்டு வேளை நடந்துக்கொண்டிருந்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளோம். அடித்தளம் மட்டும் தான் போட்டிருந்தோம். நீதிமன்ற கட்டணத்தை குறைப்பதற்காக கட்டிய வீட்டை காட்டாமல் கூரை இருப்பதாக காட்டியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 2018க்கு பிறகு வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை என்றால் சரிதான். 2018ல் சாந்தி என்பவருக்கு விடுதலை பத்திரம் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியாது. சாந்தி இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். சாந்தி நீங்கள் கட்டியுள்ள வீட்டை அப்புறப்படுத்தி சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.15 நான் தாக்கல் செய்யவில்லை. அதை யார் எழுதினார்கள் என்றால் தெரியாது. அந்த ஆவணத்தை யாரிடம் வாங்கி தாக்கல் செய்தீர்கள் என்றால் அரசாங்கத்திடம் வாங்கி தான் தாக்கல் செய்தேன். இந்த ஆவணம் எனது தாயார் தான் வாங்கினார். எனக்கு தெரியாது. நிருபணவாக்குமூலம் தங்கள் தாய்க்கும் சேர்த்து தாக்கல் செய்திருப்பதால் இந்த ஆவணத்தை பற்றி நீங்கள் பதில் சொல்ல கடமைப்பட்டவர் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் தேதி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். பரப்பளவும் அதில் குறிப்பிடவில்லை. சர்வே எண் உள்ளது. பட்டா எண் குறிப்பிடவில்லை. அந்த ஆவணத்தில் தங்கள் பெயரோ, தங்கள் சகோதரி பெயரோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தை போலியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. போலி ஆவணங்கள் தயார் செய்து தாக்கல் செய்தால் தண்டனை உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த கிராம நிர்வாக அலுவலர் பெயர் எனக்கு தெரியாது. இந்த ஆவணத்தின் உண்மைதன்மை குறித்து இதை வழங்கிய அதிகாரியை விசாரிக்க முடியுமா என்று கேட்டால் முடியாது. இந்த ஆவணம் கிராம நிர்வாக அதிகாரி வழங்க முடியாது என்றும், வட்டாச்சியர் தான் வழங்க அதிகாரம்

படைத்தவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முனுசாமி பெயரில் சிட்டா, அடங்கலும் இருப்தை நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

//**கையொப்பம்**//
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**